2. அறிவிப்புகள்

(அ) 25-வது சுதந்திர தினவிழா நிகழ்ச்சி விபரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு.

நம் நாட்டின் 25-வது சுதந்திர தின விழா வரும் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நாடெங்கிலும் கொண்டாடப்பட இருப்பது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாருக்கும் தெரியும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நம்மிடம் இந்நாட்டின் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு நடைபெற்றது.

எனவே வரும் ஆகஸ்டு திங்கள் 14-ம் நாள் இரவு இவ்விழாவினைக் கொண்டாட, தமிழ் நாடு சட்டப்பேரவை மண்டபத்தில், சட்டப் பேரவை, சட்ட மன்ற மேலவை ஆகிய இரு அவைகளின் உறுப்பினர்களின் கூட்டம் நடக்க இருக்கிறது. இக்கூட்டத்தில் தமிழ் நாட்டு ஆளுநர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சட்டப்பேரவைத் தலைவர் அவர்களும், சட்ட மன்ற மேலவைத் தலைவரவர்களும், சட்டப் பேரவை முன்னவர் அவர்களும் மற்றும் கட்சித் தலைவர்களும் உரையாற்றுவார்கள்.

நிகழ்ச்சி விவரம் பின்வருமாறு :

ஆகஸ்டு, 14 1972—

இரவு 10–30 மணி ..	உறுப்பினர்களும் அழைப்பிதழ் பெற்றவர்களும் தத்தம் இருக்கையில் அமருதல்.
10–40 ,, ..	ஆளுநர் அவர்கள் தலைமைச்செயலகக் கட்டிடத்திற்கு வந்து பேரவைத் தலைவர் அறைக்குச் செல்லுதல்.
10–45 ,, ..	பேரவைத் தலைவருடனும், சட்டமன்ற மேலவைத் தலைவருடனும், ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவை மண்டபத்தை அடைதல்.
10–45 முதல் 11–59 வரை ..	தமிழ்த் தாய் வாழ்த்து

சொற்பொழிவு—

ஆளுநர் அவர்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர்.

மாண்புமிகு சட்டப் பேரவை முன்னவர்.

மற்றும் கட்சித் தலைவர்கள்.

ஆகஸ்டு 15, 1972—

நள்ளிரவு 12–00 மணி முதல் 12–02 வரை	..	இரண்டு நிமிட மௌன அஞ்சலி.
12–02 மணி முதல் 12–04 வரை	..	நாட்டு வணக்கம்.
12–15 மணி	..	ஆளுநர் தலைமைச் செயலகத்தைவிட்டுப் புறப்படுதல்.
		நிகழ்ச்சி முடிவுற்று சட்ட மன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் புறப்படுதல்.

இந் நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு எல்லோருக்கும் அனுப்பப்படுகின்றன.

இப்பேரவையில், பேரவைத் தலைவரின் இருக்கைக்கு வலப்புறம் முன் வரிசையில் மாண்புமிகு அமைச்சர்களும், இடப்புறம் முன் வரிசையில் கட்சித் தலைவர்களும் அமர இடம் ஒதுக்கப்படும். மற்ற உறுப்பினர்கள் இந்த இரண்டு வரிசை தவிர மற்ற எந்த இடத்திலும் அமரலாம்.

எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் தம் ஒத்துழைப்பை நல்கி விழா சிறப்புடன் நடக்கச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அலுவல் ஆய்வுக்குழு தீர்மானித்தப்படி, பேரவைக் கூட்டம் 12—8—1972 சனிக் கிழமைக்குப் பின் 17—8—1972 வியாழனன்றுதான் நடக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

(ஆ) மதுரைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மேலும் ஒரு அறிவிப்பினைத் தர விரும்புகிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (செனேட்டில்) இப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்துவரும் (1) திரு. பெ. மலைச்சாமி, (2) திரு. வி. மலைக்கண்ணன், (3) திரு. கா. மு. கதிரவன், (4) திரு. சோ. காவேரிமணியம் ஆகியோரின் பதவிக்காலம் 22—8—1972 ஆம் நாளுடன் முடிவடைவதால் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் ஏற்பட இருக்கும் நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதி வாரி அடிப்படையில் (Proportional Representation) இத் தேர்வு நடைபெறுவதில்லை. எனவே வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 17—8—1972,